# இயேசுவை சந்திக்கும் ஒரு திமிர்வாதக்காரன்

**இந்த சிறுவர்கள் கல்வி - செயல்பாடுகளில் எதையாவது தெரிந்துகொள்க.**

**மாற்கு 2:1-12** லிருந்து ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ திமிர்வாதக்காரனின் **கதையை** வாசிக்கவும். அவன் இயேசுவை சந்திக்கிறான். இரட்சிப்பு அடையும்படியாக நமது நண்பர்கள் இயேசுவை சந்திக்க எவ்வாறு உதவ முடியும் என்பதை இக்கதை கூறுகிறது. கதையைக் கூறிய பின் இந்தக் கேள்விகளைக் கேட்கவும்.

- இயேசு வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்ட மக்கள் என்ன செய்தனர்? (வச.2).
- நோயாளியின் நண்பர்கள் அவனை எவ்வாறு இயேசுவினிடத்தில் கொண்டு வந்தனர்? (4)
- அந்த மனிதனின் நண்பர்களைப் பற்றி இயேசு கவனித்தது என்ன? (5)
- நோயாளியிடம் இயேசு முதலில் கூறியது என்ன? (5)
- நியாயப் பிரமாணிகள் இயேசுவின் வார்த்தையைக் குறித்து எண்ணியது என்ன? (7)
- தனக்கு பாவிகளை மன்னிக்க அதிகாரம் உண்டு என்று இயேசு எவ்வாறு காட்டினார்? (10-12)

**நாடகமாக்குக:** மாற்கு 2:1-12 ல் உள்ள திமிர்வாதக்காரனை இயேசு குணமாக்கும் கதையை நாடகமாக்குக. உங்கள் நேரத்தை இதற்காக சிறுவர்களுடன் செலவிடவும். எல்லா பகுதியையும் உபயோகிக்க வேண்டும் என்பதில்லை.

- **பெரிய பிள்ளைகளோ** பெரியவர்களோ ஏற்கும் வேடம்:

    **கதை கூறுபவர்:** கதை கூறி பேச வேண்டியதை நினைப்பூட்டுபவர்

    **இயேசு**

- **சிறிய பிள்ளைகள்** தாங்கும் வேடங்கள் :

    **திமிர்வாதக்காரன்**

    **நான்கு நண்பர்கள்**

    **மக்கள்**

    **நியாயப் பிரமாணிகள்**

## நாடகம், பகுதி 1, மாற்கு 2:1-4

**கதை கூறுபவர் :** கதையின் முதல் பகுதியைக் கூறவும் (வச. 1-4) "நோயாளியின் நண்பர்கள் கூறுவதைக் கேளுங்கள்."

**முதல் நண்பன் :** "இயேசு அந்த வீட்டில் இருக்கிறார். நாம் திமிர்வாதத்தில் கிடக்கும் நம் நண்பனை அவரிடம் கொண்டு போவோம். இயேசு அவனை குணமாக்குவார்." (நோயாளியை தூக்கிச் செல்வது போல் நடிக்கவும்).

**நண்பன் 2:** "மக்கள் மிகவும் கூட்டமாய் வீட்டில் நிற்கிறார்கள். நாம் எப்படி வீட்டுக்குள் போக முடியும்?"

**நண்பன் 3:** "நமது நண்பனைத் தூக்கிக் கொண்டு நம்மால் எப்படி வீட்டுக்குள் போக முடியும்."

**நண்பன் 4 :** "நாம் கூரை மீது ஏறி ஒரு துவாரம் உண்டாக்கி நமது நண்பனை கயிறால் கீழே இறக்குவோம்."

**நண்பர்கள்** (4 பேரும்)**:** நாற்காலி அவரது மேசை மீது ஏறி ஓட்டைப் பிரிப்பது போல் நடிக்கவும்.

## நாடகம், பகுதி 2, மாற்கு 2:5-7

**கதை கூறுபவர் :** கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும் (வச. 5-7). "மக்கள் கூறுவதைக் கேளுங்கள்."

**மக்கள்** : "அதோ பாருங்க! அவர்கள் கூரையில் ஓர் ஓட்டையை உண்டாக்குகிறார்கள்."

"சே! தூசி என் மீது விழுகிறது"

"அதோ! அவர்கள் கட்டிலோடு யாரையோ கீழே இறக்குகிறார்கள்."

"அவன் என் தலைக்கு நேராய் வருகிறான்."

"விலகி இடம் கொடுங்க"

**திமிர்வாதக்காரன்:** கீழே வந்து அப்படியே கிடக்கிறான்.

**இயேசு** : (மேலே பார்த்து) "நண்பர்களே உங்கள் விசுவாசத்தை நான் காண்கிறேன்" (கீழே குனிந்து நோயாளியைத் தொட்டு) "மகனே! உனது பாவங்கள் மன்னிக்கப்பட்டது."

**நியாயப்பிரமாண ஆசிரியன் :** (கோபத்துடன் பேசுகிறான்) "பாவங்களை மன்னிக்க இந்த மனிதன் யார்? அவன் தன்னை யாரென்று நினைத்துக் கொள்ளுகிறான்."

## நாடகம், பகுதி 3, மாற்கு 2:8-12

**கதை கூறுபவர் :** கதையின் மூன்றாவது பகுதியைக் கூறவும் (வச. 8-12) "இயேசு கூறுவதைக் கேளுங்கள்"

**இயேசு** : (கூட்டத்தைப் பார்த்து) "என்னால் பாவத்தை மன்னிக்க முடியும் என்பதைக் காட்டுகிறேன்" (திமிர்வாதக்காரனைப் பார்த்து) "எழுந்து நட!"

**திமிர்வாதக்காரன் :** குதித்து எழுந்து கூறுகிறான்: "தேவனுக்கே மகிமை! என்னால் நடக்க முடிகிறது" (நடக்கிறான்) "பாருங்க! நான் இனி வாதம் பிடித்தவன் அல்ல! என்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன."

**மக்கள்** : "நாம் தேவனைத் துதிப்போம்! இப்படிப்பட்ட ஒன்றை இதுவரை நாம் பார்த்தது கிடையாது."

**கதை கூறுபவர்:** நாடகம் முடிந்ததை அறிவித்து, உதவியவர்களுக்கும், கேட்ட பெரியவர்களுக்கும் நன்றி கூறவும்.

பெரியவர்களைப் பார்த்து ஒரு குழந்தை (உங்கள் சமுதாயம் ஏற்றுக் கொண்டால்) இப்படியாகக் கேட்கலாம்: "நமது வாழ்க்கையில் உள்ள தீமையில் இருந்து வேறு எந்த வழிகளில் எல்லாம் இயேசு நம்மை இரட்சிக்கிறார்?" (மக்கள் உதாரணம் தருக)

சபைத் தலைவருடன் பேசி குழந்தைகள் செய்ய வேண்டியவற்றிற்காக ஏற்பாடு செய்யவும்.

- பெரியவர்களுக்காக ஆராதனை வேளையில் நாடகத்தை அரங்கேற்றவும்.
- இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்ட கேள்விகளை பெரியவர்களிடம் கேட்கவும்.
- பிள்ளைகள் தயாரித்த கவிதை போன்றவற்றை கூறவும்.

**சங்கீதம் :** சங் 25:1,2,7 வசனங்களை மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

கர்த்தாவே உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

என் தேவனே உம்மை நம்பி இருக்கிறேன். நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும். என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழ விடாதேயும்.

என் இளவயதின் பாவங்களையும் என் மீறுதல்களையும் நினையாதிரும்.

கர்த்தாவே உம்முடைய தயவின் நிமித்தம் என்னை உமது கிருபையின் படியே நினைத்தருளும்.

ஒரு படுக்கையின் படம் வரைக:

- சிறிய பிள்ளைகளுக்கு பார்த்து வரைய உதவுமாறு பெரிய பிள்ளைகளிடம் கூறவும். ஆராதனையின் போது அதை அவர்கள் பெரியவர்களிடம் காட்டலாம்.
- இந்த வெற்றுப்படுக்கை தேவன் நம்மை தீமையின் விளைவுகளில் இருந்தும் பிணிகளில் இருந்தும் காப்பார் என்பதைக் காட்டுகிறது என்று விளக்கம் அளிக்கவும்.

**விளக்கவும்:** இந்த வாழ்க்கையில் நாம் துன்பப்பட்டாலும், இயேசு என்றென்றும் நிலைத்திருக்கும் ஒரு புதிய நல்ல வாழ்க்கையை அளிப்பார் என்பதை விளக்கவும்.



**மனன வசனம் :** லூக். 19:10.

**சங்கீதம் :** சங். 25:1,2,7 ஐ மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கவும்.

பெரிய பிள்ளைகள் கவிதை, சிறுகதை, எழுதலாம் அல்லது சாட்சி கொடுக்கலாம். அது தாங்கள் பார்த்த ஒரு குணமாகுதலையோ அல்லது இயேசு எப்படி தங்கள் இருதயத்தில் வந்தார் என்பதைப் பற்றியோ இருக்கலாம்.

**ஜெபம்:** அன்பான கர்த்தாவே! தீமையினால் வரும் துன்பத்தை வெற்றி கொள்ளும் உமது வல்லமைக்காக உம்மைத் துதிக்கிறோம். நீர் சில வேளை எங்களை குணமாக்கி எப்போதும் எங்கள் பாவத்தை மன்னிக்கிறீர். எங்கள் இருதயத்தில் இருந்து தீமையை அகற்றி மரணத்திற்கு பின்னரும் நிலைநிற்கும் ஒரு வாழ்க்கையைத் தருகிறீர். கடைசியாக, உம்மோடு நாங்கள் வரும் போது துன்பமே இருக்காது என்பதை நாங்கள் அறிவோம்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net